**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

In the Court of District Munsif Cum Judicial Magistrate Court, Uthukottai

Calendar : STC No. 126 of 2017

Deposition for witness for Prosecution/ Defence :

Court

Name : ரமேஷ்பாபு LW3, PW3

Father's Name : துரை

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.09.2022

முதல் விசாரணை

நான் MCS நகர் பூண்டியில் குடியிருந்து வருகிறேன். நான் டாஸ்மார்க்கடையில் விற்பனையாளராக பணிசெய்து வருகிறேன். கடந்த 24.02.2015 ஆண்டு எங்களது டாஸ்மார்க் கடையில் 38 AGT OK பாட்டில்களும் மற்றும் கடையில் இருந்த சில்லரை காசு 980/= திருடுபோயிருந்தது. 38 பாட்டில்களின் மொத்த விலை 9500/= அடுத்த நாள் நாங்கள் கடையை திறக்கும்போது பார்தோம். பூட்டுக்கள் எல்லாம் உடைந்து இருந்ததை பார்தோம். போலீசார் விசாரணை செய்தார்கள். கைரோகை பார்தார்கள். பாலவாக்கம் பெருமாள் ITயை அருகே போலீசாரிடம் பிடிப்பற்றதாகவும் அது குறித்து எங்களுக்கு தகவல் கொடுத்தார்கள். எங்களது சூப்பர்வைசர் சிவகுமார் என்பவர் புகார் அளித்திருந்தார். அந்த புகாரின் பேரில் போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துக்கொண்டார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

2) நான் கதவை திறக்கும்போது பூட்டு எந்த பக்கமாக திறந்திருந்தது என்றால் நாங்கள் கடையை திறக்கவில்லை. எங்களுக்கு தகவல் வந்தபிறகு கடையை வந்து பார்த்தோம். போலீசார் சம்பவயிடத்திற்கு எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் நான் வரும்போது தான் போலீசார் கடையின் முன்பு நின்றுக்கொண்டிருந்தார்கள்.

3) பூட்டை உடைத்த நபர் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். கடையின் சாவி எங்களது மேற்பார்வையாளரிடம் தான் இருக்கும். காணாமல் போன பாட்டில்களின் தயாரிப்பு குறித்து பாச்எண் எதாவது புகார்கொடுத்தார்களா என்றால்அது குறித்து எனக்கு எதுவும் தெரியாது.

4) அசா.1 மற்றும் அசா.2 நாங்களே சேர்ந்து பாட்டில்களை கள்ளச்சந்தையல் விற்பனை செய்துவிட்டு போலிஸில் புகார் அளித்தோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. புகார் அளித்தது எனது மேல் அதிகாரி என்பதால் அவருக்கு அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
மறுவிசாரணை இல்லை.